RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 195 | ஜூலை.18 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘ரூ.3 லட்சம் பேரம்; ரூ.50 லட்சத்துக்கு விற்பனை’ நாமக்கல் ‘கிட்னி’ கொள்ளையில் நடவடிக்கை கோரும் அன்புமணி

சென்னை: ஜூலை.18-

“நாமக்கல்லில் ஏழை விசைத்தறி தொழிலாளர்களை குறிவைத்து சிறுநீரகங்கள் கொள்ளை அடிக்கப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்து உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் உயர்நிலைக்குழு விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என,” பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம், குமாரப் பாளையம், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் விசைத்தறிகளில் பணியாற்ற வரும் ஏழைத் தொழிலாளர்களை ஏமாற்றி, அவர்களின் சிறுநீரகங்களை சில கும்பல்கள் பறித்துச் செல்வதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.



தொழிலாளர்களின் வறுமையைப் பயன்படுத்தி அவர்களின் சிறுநீரகங்கள் கொள்ளையடிக்கப் படுவதும், அதை தமிழக அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதும் கண்டிக்கத்தக்கவை.

நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தொழிலாளர்களை சந்திக்கும் கும்பல், அவர்களின் சிறுநீரகங்களுக்கு ரூ.2 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை பணம் தருவதாகக் கூறி விலை பேசுவதாகவும், ஒப்புக்கொள்பவர்களுக்கு ரூ. 1 லட்சம் வரை முன்பணம் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. கோவை, சேலம், திருச்சி, கரூர், பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று அவர்களிடமிருந்து சிறுநீரகங்கள் எடுக்கப்படுவதாகவும், அவை ஆந்திரம், கர்நாடகம், தெலுங்கானா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த பணக்காரர்களிடம் ரூ.50 லட்சம் வரை பெற்றுக்கொண்டு பொருத்தப்படுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் சிறுநீரகத்தை வழங்கியவர்களில் சிலருக்கு, முன்பணம் போக மீதமுள்ள தொகை வழங்கப்படாத நிலையில், அவர்கள் குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து தான் இந்த மோசடி வெளியுலகத்திற்கு தெரியவந்துள்ளது. ஊடகங்களில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து தான் இது குறித்து விசாரணை நடத்தப்போவதாக நாமக்கல் மாவட்ட மருத்துவத்துறை தெரிவித்திருக்கிறது.

மனிதர்கள் உயிர்வாழத் தேவையான முதன்மையான உடல் உறுப்புகளில் சிறுநீரகமும் ஒன்று. ரூ.1 லட்சத்திற்காக சிறுநீரகத்தையே மக்கள் விற்கத் துணிகிறார்கள் என்றால் அவர்களின் வாழ்க்கை நிலை எந்த அளவுக்கு மோசமாக உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும். இதையெல்லாம் கூட அறியாமல் தமிழக மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருப்பதாக கதையளந்து கொண்டிருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

நாமக்கல் மாவட்டத்தில் சிறுநீரகத் திருட்டு நடப்பதாக சில ஆண்டுகளுக்கு முன் குற்றச்சாட்டுகள் எழுந்ததைத் தொடர்ந்து, அது குறித்து விசாரணை நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தொடர் கண்காணிப்பை தமிழக அரசு மேற்கொண்டிருந்தால், இத்தகைய சிறுநீரகத் திருட்டுகளைத் தடுத்திருக்க முடியும். ஆனால், தமிழக அரசு நீண்டகாலமாக உறங்கிக் கொண்டிருந்து விட்டு இப்போது துறை சார்ந்த விசாரணை நடத்தப்போவதாக கூறுகிறது. அதில் நீதி கிடைக்க வாய்ப்பில்லை என்பதால் சென்னை உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் உயர்நிலைக்குழு விசாரணைக்கு ஆணையிட வேண்டும்.” என்று வலியுறுத்தியுள்ளார்.

## ‘நடிக்காதீங்க ஸ்டாலின்...’ காமராஜர் குறித்த அவதூறு பேச்சுக்கு இபிஎஸ் கண்டனம்

சென்னை: ஜூலை.18-

“காமராஜர் குறித்த சர்ச்சையான விவாதங்கள் நடப்பது சரியல்ல என்றால், அந்த சர்ச்சையை ஆரம்பித்தது யார்?. அதைவைத்து அவதூறு வீசுவது யார்?. அந்த அவதூறான பேச்சை திரித்து பேசும் போதே தெரிகிறது, உங்களுடைய நோக்கம் என்னவென்று. நடிக்காதீங்க ஸ்டாலின்.” என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இபிஎஸ் தனது எக்ஸ் சமூகவலைதளத்தில் பகிர்ந்த பதிவில், “கல்விக்கண் திறந்த காமராஜரின் பெரும் புகழுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் திமுக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா பேசியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

காமராஜர் மறையும் தருவாயிலான நிகழ்வுகள் வரலாற்றுக் குறிப்பாக உள்ள போதே, காமராஜர் கருணாநிதியின் கையைப் பிடித்துப் புகழ்ந்தார் என்பது எவ்வளவு பெரிய பச்சைப்பொய்? திமுகவின் வரலாற்றுத் திரிப்புக்கு ஒரு அளவே இல்லையா?

காமராஜர் பற்றி ஸ்டாலினும், திமுகவும் பேசுவதெல்லாம் நகைமுரண்.

அவர் குறித்து சர்ச்சையான விவாதங்கள் நடப்பது சரியல்ல என்றால், அந்த சர்ச்சையை ஆரம்பித்தது யார்? உங்கள் கட்சியின் மாநிலங்களவை குழுத் தலைவர், திமுகவின் துணை பொதுச்செயலாளர் திருச்சி சிவா தானே?

அதை வைத்து, சமூக ஊடகங்கள் முழுக்க அவர் குறித்த அவதூறுகளை அள்ளி வீசிக் கொண்டிருப்பது உங்கள் திமுக கொத்தடிமைகள் தானே?

காமராஜர் குறித்த கருணாநிதியின் பழைய முரசொலி சித்திரங்களை எல்லாம் யாரும் மறந்துவிடவில்லை. அப்படி அவர் மீது பன்னெடுங்காலமாக கருணாநிதி வகையறா கொண்டிருந்த வன்மத்தை, இப்படி ஒரு சர்ச்சை உருவாக்கி, அதன் மூலம் காமராஜர் புகழை மழுங்கடிக்கத் துடிக்கும் அற்ப அரசியலை செய்வது திமுக தானே?

இவரே வெடிகுண்டு வைப்பாராம்..

இவரே அதை எடுப்பது போல் நடிப்பாராம்!

நடிக்காதீங்க ஸ்டாலின்!

அவதூறான பேச்சை திரித்து பேசும் போதே தெரிகிறது, உங்களுடைய நோக்கம் என்னவென்று!

ஒன்றைத் தெளிவாக சொல்கிறேன் உங்களாலோ, உங்கள் அடிப்பொடிகாளோ, ஒருபோதும் மக்களுக்காக உழைத்த பெருந்தலைவர் காமராஜரின் புகழைத் துளியும் குறைத்துவிட முடியாது. வாழ்க கர்மவீரரின் புகழ்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.




■ மதுரை மாநகராட்சி பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள சுற்றுலா தகவல் மையத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள் அருகில் உதவி ஆணையாளர் திரு.பிரபாகரன் அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் திரு.கார்த்திக், திருமதி.நூர்ஜஹான் அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# ‘வீண் விவாதங்களைத் தவிர்ப்போம்’ காமராஜர் சர்ச்சையில் முதல்வர் ஸ்டாலின் அறிவுரை


சென்னை: ஜூலை.18-

காமராஜர் குறித்த திருச்சி சிவாவின் கருத்து விவாதப் பொருளாகியுள்ள நிலையில், “கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்துக்கு இடம் கொடுக்காதீர். காமராஜரின் கனவுகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம். வீண் விவாதங்களைத் தவிர்ப்போம்.” என்று திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்துக்கு இடம் கொடுக்காதீர்.

காமராஜரை 'பச்சைத்தமிழர்' என்று போற்றியவர் பெரியார். குடியாத்தம் இடைத்தேர்தலில் அவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்த வேண்டாம் என முடிவெடுத்தவர் அண்ணா. காமராஜர் மறைந்தபோது ஒரு மகன் போல நின்று இறுதி மரியாதை ஏற்பாடுகளைச் செய்து, நினைவகம் அமைத்து, அவரது பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தவர் கலைஞர். உடல் நலிவுற்ற நிலையிலும் எனது திருமணத்துக்கு நேரில் வந்து அவர் வாழ்த்தியது என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய பெரும்பேறு!

அத்தகைய பெருந்தலைவர், பெருந்தமிழர் குறித்துப் பொதுவெளியில் சர்ச்சைக்குரிய விவாதங்கள் நடப்பது சரியல்ல. மரியாதைக்குரிய தலைவர்களின் மாண்பைக் காக்கும் வகையில்தான் எந்தக் கருத்தும் பகிரப்பட வேண்டும். சமூகநீதியையும் மதச்சார்பற்ற நல்லிணக்கத்தையும் உருவாக்க வாழ்நாளெல்லாம் உழைத்த பெருந்தலைவரின் கனவுகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்று





சேர்ந்து உழைப்போம்! வீண் விவாதங்களைத் தவிர்ப்போம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி சிவா பேசியது என்ன? சென்னையில் நேற்று முன்நாள் நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய திருச்சி சிவா, “காமராஜர் மின்சார தட்டுப்பாடு என்று தமிழ்நாடு முழுவதும் கண்டனக் கூட்டம் நடத்தினார். காமராஜருக்கு ஏசி இல்லையென்றால் உடம்பில் அலர்ஜி வந்துவிடும். அதற்காக அவர் தங்குகிற அனைத்து பயணியர் விடுதிகளிலும் குளிர்சாதன வசதி செய்ய உத்தரவிட்டார். கலைஞரின் பெருந்தன்மையை பார்த்து நெகிழ்ந்து போன காமராஜர், உயிர் போவதற்கு முன்பு, அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதியின் கைகளை பிடித்துக் கொண்டு நாட்டையும் ஜனநாயகத்தையும் நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினார்” என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர். “காமராஜர் குறித்து இழிவாக பேசியதற்காக திருச்சி சிவாவை திமுக தலைமை கண்டிக்க வேண்டும்; திருச்சி சிவாவின் செயலுக்காக அவரும். திமுக தலைமையும் தமிழ்நாட்டு மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்.” என்று பாமக தலைவர் அன்புமணி கூறியிருந்தார்.

“தனது இறுதி மூச்சு வரை, மக்களுக்காகவே வாழ்ந்த கர்மவீரர் ஐயா காமராஜர் குறித்துப் பேச, திமுகவினருக்கு எந்தத் தகுதியும் இல்லை.” என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறியிருந்தார்.

கரூர் தொகுதி காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி தனது எக்ஸ் தளத்தில், “முதல்வராக அரசினர் விடுதியில் தங்கியிருந்தபோது வெப்பம் அதிகமாக இருந்தால், மரத்தடியில் கட்டிலைப் போட்டு உறங்கியவர் காமராஜர். அவர் ஏ.சி இல்லாமல் தூங்க மாட்டார் என்று திருச்சி சிவா எம்.பி கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது.

காமராஜருக்கு எதிராக கடந்த காலத்தில் காழ்ப்புணர்ச்சியில் பரப்பப்பட்ட கட்டுக்கதைகளின் தொடர்ச்சியாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது. காமராஜர் வாழ்ந்த வீட்டுக்கு காங்கிரஸ் கட்சி வாடகை கொடுத்து வந்தது. அது அவரது சொந்த மாளிகை என்பது போன்ற திமுக பரப்பிய கட்டுக்கதைகளாலேயே காமராஜர் தேர்தல் களத்தில் வீழ்த்தப்பட்டார் என்பது வரலாறு. காமராஜருக்கு எதிராக பரப்பப்படுகிற கட்டுக்கதைகளுக்கு பதிலடி கொடுக்காமல் இருந்தால், காமராஜர் ஆன்மா நம்மை மன்னிக்காது.” என்று கூறியிருந்தார்.

விளக்கம் கூறிய திருச்சி சிவா

இந்நிலையில் திருச்சி சிவா அளித்த விளக்கத்தில், “முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையின் கீழ் பணியாற்றும் நான், மறைந்த தலைவர்களின் புகழுக்கு மாசு படிவதை எந்த வகையிலும் யார் செய்தாலும் ஏற்கும் மனநிலை கொண்டவனல்ல. நாட்டு விடுதலைப் போரில் பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து, தியாகத் தழும்பேறி, முதல்வராகவும், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் மக்கள் தொண்டாற்றி, எல்லோர் மனதிலும் தனித்த இடம் பிடித்த பெருந்தலைவர் காமராஜர் மீது மிகுந்த மரியாதையும் பெருமதிப்பும் கொண்டவன் நான். இந்த விளக்கத்தினை எல்லோரும் அன்புகூர்ந்து ஏற்று என் உரையில் நான் கூறிய செய்தியினை மேலும் விவாதப் பொருளாக்கிட வேண்டாம் என அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்” என்று கூறியிருந்தார்.

ஆனாலும், காமராஜர் தொடர்பான கருத்துக்கு கடுமையான எதிர்வினைகள் கிளம்பிய நிலையிலும், ஆங்காங்கே திமுக, திருச்சி சிவாவை எதிர்த்து போராட்டங்கள் நடக்கும் நிலையிலும் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக முதல்வர் ஸ்டாலின், “கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்துக்கு இடம் கொடுக்காதீர். காமராஜரின் கனவுகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம். வீண் விவாதங்களைத் தவிர்ப்போம்.” என்று அறிவுரை கூறியுள்ளார்.






## பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் கலைஞர் 102ஆவது பிறந்தநாள் விழா மற்றும் தெருமுனை கூட்டம்

பெருங்களத்தூர், ஜூலை.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக் குட்பட்ட பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் முன்னிட்டு தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ் சேகர் தலைமையில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் இரா. ஓம் பிரகாஷ் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி பிரகாஷ் வரவேற்பில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக குறு சிறு தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா.மோ.அன்பரசன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா தலைமை கழக நட்சத்திர பேச்சாளர் செங்கை தாமஸ் கழக இளம் பேச்சாளர் ரிஷி சந்தோஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சத்திய பிரபு, கார்த்திக் சிவசுப்பு புகழேந்தி மணிவண்ணன் சுந்தர் சிவகுமார் ஐசக் வெங்கடேசன் சுரேஷ் மஞ்சுநாதன் டி கே கோட்டி நடராஜன் சோமசுந்தரம் பரஞ்சோதி வேலு ரவி துளசிராமன் ரேமன் பகுதி துணி அமைப்பாளர்கள் சுரேஷ்குமார் கார்த்திக் ராஜா மணிகண்டன் தேவராஜ் கதிரவன் ராகுல் அன்சாரி அருண்குமார் செந்தில் குமார் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



■ மதுரை எல்லீஸ் நகர் கருமாரியம்மன் கோவில் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் வாடகை செலுத்திடாமல் செயல்பட்டு வந்த கடை சீல் வைக்கப்பட்டது. வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளர் ரங்கநாதன் உத்தரவின் பேரில் இப்பணியினை உதவி வருவாய் அலுவலர் சத்யா மற்றும் பணியாளர்கள் செய்தனர்



## பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 123வது பிறந்தநாள் முன்னிட்டு பெருங்களத்தூர் தெற்கு பகுதி தலைமை சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

பெருங்களத்தூர், ஜூலை.18-

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 123வது பிறந்த நாள் தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது அதன் அடிப்படையில் தமிழக வெற்றிக் கழகதின் தலைவர் தளபதி விஜய் அவர்களின் ஆலோசனைப்படி பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அறிவுறுத்தல்படி செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட செயலாளர் டி.சரத்குமார் அவர்களின் வழிகாட்டுதல்படி பெருங்களத்தூர் தெற்கு பகுதி சார்பாக டாக்டர் எம்.செந்தில்குமார் தலைமையில் விஜய் வெங்கடேஷ், மகேஷ், பாளையம், அஜித், தினேஷ், தமிழ், எபி, சுரேஷ், வேலன், அரவிந்த், கணேஷ், வினோத், ஆனந்த், ஜானகிராமன், விக்னேஷ், யோகி, பிரசாந்த், மற்றும் விஜய் ஆகியோர் கலந்துகொண்டு பெருங்குளத்தூரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்





■ சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் கடந்த 2024 ஆம் ஆண்டு 3000 க்கும் மேற்பட்ட லிட்டர் எரி சாராயம் பதுக்கி வைக்கப்பட்டதாக காவல்துறைக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி காவல்துறை அதை பறிமுதல் செய்து வைத்திருந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் படி இன்று தீயணைப்பு துறையினர் மற்றும் காவல்துறை கூடுதல் எஸ் பி சுகுமாரன் தலைமையிலான குழுவினர் சிவகங்கை மருத்துவக் கல்லூரி அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் பள்ளம் தோண்டி எரி சாராயத்தை நேற்று ஊற்றி தீ வைத்த சம்பவம் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.






## உலக மக்கள் தொகை தினம் 2025ஐ (ஜூலை 11) முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில், உறுதிமொழி ஏற்பு மற்றும் விழிப்புணர்வு ரதம், விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

சிவகங்கை, ஜூலை.18-

சிவகங்கை மாவட்டம் உலக மக்கள் தொகை தினம் 2025ஐ (ஜூலை 11) முன்னிட்டு, மருத்துவம்மக்கள் நல் வாழ்வுத்துறை, மாவட்ட குடும்பநலச் செயலகம் ஆகியவைகளின் சார்பில், சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில், நேற்று (17.07.2025) மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் உறுதிமொழி ஏற்பு மற்றும் விழிப்புணர்வு ரதம், விழிப்புணர்வு பேரணி, விழிப்புணர்வு கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

உலக மக்கள் தொகை 1987 ஜுலை 11ல் 500 கோடியை தாண்டியதை தொடர்ந்து, மக்கள் தொகை பெருக்கம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக ஐ.நா. சபையால் அறிவிக்கப்பட்டு அனுசரிக்கப்படுகிறது.

1947ல் இந்திய மக்கள் தொகை 35 கோடியாகவும், 2001ஆம் ஆண்டு 102 கோடியாகவும், 2011ஆம் ஆண்டு 121 கோடியாகவும், 2021ஆம் ஆண்டு உத்தேசமாக 138 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் 2011ன் படி உத்தேசமாக மக்கள் தொகை 7,21,47,030ஆக உள்ளது.

மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் தேவைகள், பற்றாக் குறைகள் மற்றும் குடும்பகட்டுப்பாட்டின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட தமிழக அரசால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இதன் நோக்கமாக, இளம் வயது திருமணத்ததை ஒழித்தல், இளம் வயது கர்பத்தினை தவிர்த்தல், தேவையற்ற கர்பங்களை தடுத்தல், ஆரோக்கியமான பிறப்பு இடைவெளியினை உருவாக்குதல், சிறு குடும்ப நெறியினை பாதுகாத்தல், குடும்ப நலத்தில் ஆண்களின் பங்கினை ஊக்குவித்தல், பெண் கல்வியினை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல் உள்ளிட்டவைகள் தொடர்பாக பொதும க்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

"உடலும் மனமும் பக்குவமடைந்து உறுதியாகும் வயது 21 அதுவே பெண்ணுக்கு திரும ணத்திற்கும் தாய்மை யடைவதற்கும் உகந்த வயது" என்பது இந்த ஆண்டின் உலக மக்கள் தொகை தினத்தின் முழக்கமாகவும், "ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப்பேறு திட்டமிட்ட பெற்றோருக்கான அடையாளம்" என்பது இவ்வாண்டின் உலக மக்கள் தொகை தினத்தின் கருப்பொருளாகவும் உள்ளது.

அரசின் குடும்ப நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, விழிப்புணர்வு ரதமானது இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வு ரதமானது மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் சென்று பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்திட உள்ளது.

இதனை பொதுமக்கள் அறிந்து கொண்டு, கடைபிடித்து, அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் கல்லூரி மாணவியர்கள், பயிற்சிப்பள்ளி செவிலியர்கள், துணை செவிலியர்கள், களப்பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். பொதுமக்களை எளிதில் ஈர்த்திடும் வண்ணம் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளுடன் இப்பேரணியானது சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் தொடங்கி, திருப்பத்தூர் சாலை, பழைய நீதிமன்ற வாசல் மற்றும் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று, தாய் சேய் நல மருத்துவமனை அருகில் நிறைவடைந்தது.

மேலும், இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சியர் தலைமையில் உலக மக்கள் தொகை தின உறுதிமொழி ஏற்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை மருத்துவமனை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சத்யபாமா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.மீனாட்சி, துணை இயக்குநர் (குடும்ப நலம்) மரு.வி.அருள்தாஸ், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு.கவிதாராணி, மக்கள் கல்வி மற்றும் தகவல் அலுவலர் (குடும்பநலச் செயலகம்) முனைவர். செந்தில்குமார், முதல்வர் அரசு மகளிர் கலைக்கல்லூரி முனைவர் நாளதம் மற்றும் மாவட்ட குடும்ப நல அலுவலர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், கல்லூரி மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் வடக்கு முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினருமான டாக்டர் செல்லத்துரை திமுக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை பிறந்த நாளையொட்டி நேரில் சந்தித்து கைத்தறி ஆடை கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

## குளச்சல்: இரவு தீப்பிடித்து எரிந்த கார், ஸ்கூட்டர் வளர்ப்பு நாயும் கருகி பலியான சோகம்

கன்னியாகுமரி, ஜூலை.18-

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், வாணியக்குடி பகுதியை சேர்ந்தவர் ஜெகன் . நள்ளிரவு நேரத்தில் ஷெட்டில் நிறுத்தி இருந்த கார் திடீரென தீ பிடித்து எரிந்தது. சத்தம் கேட்டு பார்த்தபோது அருகில் நிறுத்தி இருந்த பைக்கும் சேர்ந்து எரிந்தது. உடனே குளச்சல் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை அணைத்தனர்.



இதில் ஷெட்டில் கட்டிப் போட்டிருந்த வளர்ப்பு நாய் தப்பி ஓட முடியாமல் கருகி பலியானது. இது குறித்து ஜெகன் குளச்சல் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### எச்ஐவி, பால்வினை, காசநோய் மற்றும் இரத்த தானம் ஆகியவைகள் குறித்து,

## பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பான நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் மற்றும் நடமாடும் நம்பிக்கை மைய வாகனத்தினை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, கொடியசைத்து துவக்கி வைத்தார்





சிவகங்கை, ஜூலை.18-

சிவகங்கை மாவட்டம், எச்ஐவி, பால்வினை, காசநோய் மற்றும் இரத்த தானம் ஆகியவைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பான நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் மற்றும் நடமாடும் நம்பிக்கை மைய வாகனத்தினை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, நேற்றையதினம் (17.07.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் மூலம் எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் முதல் நாள் உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்படுகிறது. எய்ட்ஸ் மற்றும் அதை ஏற்படுத்தும் வைரஸ், எச்.ஐ.சி. பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்திடும் பொருட்டு, அதிகரிக்கும் நோக்கத்துடன், உலக சுகாதார அமைப்பால் உருவாக்க ப்பட்டது. எச்.ஐ.சி / எய்ட்ஸ் பற்றிய விழிப்பு ணர்வினை பொதுமக்களிடையே ஏற்படுத்திடும் பொருட்டு, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலகத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நாட்டுபுற கலை நிகழ்ச்சிகள் மூலம் HIV/AIDS, பால்வினை, காசநோய் மற்றும் இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டு, மாவட்டம் முழுவதும் உள்ள கிராமப்புறங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, இவ்வாண்டிற்கு நேற்றைய தினம் முதல் பல்வேறு கிராமப்புற பகுதிகளில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் மற்றும் நடமாடும் நம்பிக்கை மைய வாகனமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதும க்கள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, அதனை முறையாக கடைபிடித்து, சுகாதாரமான வாழ்வினை பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார். இந்நிகழ்வுகளில், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, மாவட்ட திட்ட மேலாளர் க.நாகராஜன், மாவட்ட மேற்பார்வையாளர்கள் உட்பட மருத்துவத்துறையை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் குறிப்பிட்ட தகுதியின் அடிப்படையில்,” முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதிற்கு” விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.18-

ஆண்டுதோறும் பன்னாட்டு அளவிலும், தேசிய அளவிலும் பதக் கங்கள் பெற்று சிறந்து விளங்கும் 2 ஆண் மற்றும் 2 பெண் விளைய ாட்டு வீரர்கள், 2 சிறந்த பயிற்றுநர்கள், 2 சிறந்த உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர் களுக்கு, முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது பரிசாக தலா ரூ.1.00 இலட்சம், ரூ.10,000/ மதிப்பிலான தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றை ஒவ்வொரு நிதியாண்டிலும் (ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை வழங்கி வருகிறது. மேலும், இவ்விருதினை பெற விருது ஆண்டுக்கு முந்தைய மூன்று ஆண்டுகள் விளையாட்டில் சாதனைகள் படைத்த விவரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தவிர, ஒவ்வொரு நிதியாண்டிலும் விளை யாட்டுப் போட்டிகளை நடத்தும் ஒரு நடத்துநர் / ஒரு நிர்வாகி / ஒரு ஆதரவளி க்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர் (ரூ.10.00 இலட்சத்திற்கும் அதிகமாக நன்கொடை அளித்தவர்) / ஒரு ஆட்ட நடுவர் / நடுவர் / நீதிபதி ஆகியோர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசாக, ரூ.10,000/க்கு மிகாமல் ஒரு தங்கப் பதக்கமும், ஒரு பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. மேலும், இவ்விருதினை பெற விருது வழங்குவதற்கு முந்தைய இரண்டு வருட செயல்பாடுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்படி, 2024 2025 மற்றும் 20252026 ஆகிய 2 ஆண்டுகளுக்கான முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பங்கள், தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள், பயிற்றுநர்கள், உடற்கல்வி இயக்குநர் / உடடற்கல்வி ஆசிரியர் / விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் நடத்துநர் / ஒரு நிர்வாகி / ஒரு ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர் / ஒரு ஆட்ட நடுவர் / நடுவர் / நீதிபதி ஆகியோர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

தகுதிகள்

1. தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளாக வசித்து வரும் தமிழ்நாட்டிற்காக இரண்டு முறை தமிழ்நாடு அணியின் சார்பாக கலந்து கொண்டு இந்தியாவின் சார்பாக விளையாடியவர்கள் தகுதி பெறுவர்.

2. இந்தியாவின் சார்பாக கலந்து கொண்ட தமிழ்நாட்டில் பணியின் நிமித்தம் குறைந்தது 5 ஆண்டுகளாக வசித்து வரும் முப்படை, ரயில்வே, காவல், அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புத் துறை மற்றும் இதர துறைகளில் பணிபுரிபவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

3. இரண்டாவது முறையாக ஒரு நபருக்கு இவ்விருது வழங்கப்பட மாட்டாது.

4. ஒருவர் காலமாகும் பட்சத்திலும், இவ்விருது வழங்கப்படும்.

5. கீழ்க்கண்ட ஆண்டுகளில் விளையாட்டில் பெற்ற சிறந்த வெற்றிகளை இவ்வி ருதிற்காக கருத்தில் கொள்ளப்படும்.

•2024-2025 ஆம் ஆண்டிற்கு சிறந்த விளையாட்டு வீரர்கள், சிறந்த பயிற்றுநர்கள், சிறந்த உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியர் கணக்கில் எடுத்து கொள்ளப்படும் சாதனைகளின் ஆண்டுகள் 01.04.2021 முதல் 31.03.2024 வரை

•2024 2025 ஆம் ஆண்டிற்கு ஆட்ட நடுவர் /நடுவர்/நீதிபதி, நன்கொடையாளர், நிர்வாகி கணக்கில் எடுத்து கொள்ளப்படும் சாதனைகளின் ஆண்டுகள் 01.04.2022 முதல் 31.03.2024 வரை.

•2025 2026 ஆம் ஆண்டிற்கு சிறந்த விளையாட்டு வீரர்கள், சிறந்த பயிற்றுநர்கள், சிறந்த உடற்கல்வி இயக்குநர் /உடற்கல்வி ஆசிரியர் கணக்கில் எடுத்து கொள்ளப்படும் சாதனைகளின் ஆண்டுகள் 01.04.2022 முதல் 31.03.2025 வரை.

•2025 2026 ஆம் ஆண்டிற்கு ஆட்ட நடுவர் /நடுவர்/நீதிபதி, நன்கொடையாளர், நிர்வாகி கணக்கில் எடுத்து கொள்ளப்படும் சாதனைகளின் ஆண்டுகள் 01.04.2023 முதல் 31.03.2025 வரை.

6.விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தங்களது சான்றிதழ்களின் நகல்களை சான்றொப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

7.உரிய விண்ணப்பத்தில் விண்ணப் பித்தல் வேண்டும்.

8.இவ்விருதிற்காக பரிந்துரை செய்யப்படுபவர்கள் மேற்காணும் விதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

9.விளையாட்டுப் போட்டிகளின் பட்டியல்கள்

அ). ஒலிம்பிக் போட்டிகள்

ஆ). சர்வதேச ஒலிம்பிக் குழு அங்கீகாரத்துடன் சர்வதேச விளையாட்டு இணையத்தால் நடத்தப்படும் காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் ஆண்டு தோறும்).

இ). ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

ஈ). காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகள்

உ). சர்வதேச ஒலிம்பிக் குழு அங்கீகாரத்துடன் சர்வதேச விளையாட்டு இணையத்தால் நடத்தப்படும் உலக வாகையர் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் ஆண்டு தோறும்).

ஊ). தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

எ). தேசிய விளையாட்டுப் போட்டிகள்

ஏ). மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு இணையம் நடத்தும் தேசிய வாகையர் போட்டிகள்

10. விளையாட்டு நன்கொடையாளர் ஒரு ஆண்டிற்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட நன்கொடை அளிப்பவர் மட்டும்.

11. அழைப்புப் போட்டிகள் மற்றும் மண்டலங்களுக்கு இடையேயான போட்டிகள் கருத்தில் கொள்ளப்படாது. முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பங்கள்,

விருது ஆண்டுக்கு முந்தைய மூன்று ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து சாதனைகள் படைத்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களில் பதக்கமும் அதாவது உலகக் கோப்பை, தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட விளையாட்டு இணையங்களினால் நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் தனிநபர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களிலும் மற்றும் குழுப் போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடமும் பெற்றிருத்தல் வேண்டும். போட்டிகளில் பெற்ற வெற்றிகள் கருத்தில் கொள்ளப்படும்.

விருதுக்கு விண்ணப்பிக்கும் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், தமிழ்நாடு விளையாட்டு கழகம் / மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் / முதன்மை கல்வி அலுவலர் / முதன்மை உடற்கல்வி ஆய்வர் (ஆடவர் / மகளிர்) மூலமாகவும், விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் ஒரு நடத்துநர் / ஒரு நிர்வாகி / ஒரு ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர் (ரூ.10.00 இலட்சத்திற்கும் அதிகமாக நன்கொடை அளித்தவர்) / ஒரு ஆட்டநடுவர் / நடுவர் / நீதிபதி ஆகியோர்கள் உரிய வழிமுறையாகவும் விண்ணப்பங்கள் முதன்மை செயலர்/உறுப்பினர் செயலர் அவர்களுக்கு வந்து சேரும்படி அனுப்பவேண்டும்.

விளையாட்டில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு மற்றும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் ஒரு நடத்துநர் / ஒரு நிர்வாகி / ஒரு ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர் (ரூ.10.00 இலட்சத்திற்கும் அதிகமாக நன்கொடை அளித்தவர்) / ஒரு ஆட்ட நடுவர் / நடுவர் / நீதிபதி ஆகியோர்களுக்கான முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் விரிவான விதிமுறைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (http://www.sdat.tn.gov.in) இணையதளம் மூலம் பதிவிறக்கலாம்.

மேலும், விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் மேல் “முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பம்'' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ண ப்பங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமையகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசி நாள் 11.08.2025 (மாலை 05.45 வரை) ஆகும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



# கல்லல் ஒன்றியத்திற்குட்பட்ட தட்டட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி

சிவகங்கை, ஜூலை.18-

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தட்டட்டி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதும க்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அருள்மிகு பரமசிவன் மலைக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கான கிரிவலப் பாதையில் ஸ்ரீபாலமுருகன் கோவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது கேரளத்தில் புகழ்பெற்ற வேல்முருகன் கோவில் அமைந்துள்ள ஹரிப்பாடு வாழ் பிரம்ஹ ஸ்ரீசூர்ய சர்மா, பிரம்ஹ ஸ்ரீ .அபிஜித் தலைமையில் அமைந்துள்ள ஆதி தேவன் ஆன்மீக அறக்கட்டளையின் வழியாக 16.7.2025 அன்று காலை 10 45லிருந்து 11.45 சுபவேளையில் திருக்குடமுழுக்கு விழா மிகவும் பக்திபூர்வமாகவும் சாஸ்திர சம்பிராதயங்கள் கடைப்பிடிக்கப்பட்டு திருவருள் நிறைய பொதிந்த மந்திர உச்சாடனங்களுடன் சிறப்பாக நிகழ்ந்தது.பக்த கோடிகளும் போடிநாயக்கனூர் நகர சுற்றுப்புற பொதுமக்களும் பிரமுகர்களும் ஆயிர கணக்கில் கலந்து கொண்டு பாலமுருகனின் அருள் பெற்றனர்.பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் கோவில் நிர்வாகத்தின் சார்பாக சிறப்பு அன்னதானம் மற்றும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது



# ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை வேலைவாய்ப்பு தொழில் பயிற்சி வழிகாட்டுதல் கருத்தரங்கம்

தேவகோட்டை, ஜூலை.18-

தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு தொழில் பயிற்சி வழிகாட்டுதல் கருத்தரங்கம் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் நடைபெற்றது. கல்லூரியின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் துறை ஒருங்கினைப்பாளர் பேராசிரியர் ஜான்கென்னடி வரவேற்புரை நிகழ்த்தினார். சிறப்பு பயிற்றுநராகக் கலந்து கொண்ட நாமகள் ஐ.ஏ.எஸ் அகாடமியின் ஆலோசகர் நிர்மல் வளனரசு பேசியதாவது, இறுதியாண்டு படித்து முடித்து வேலைவாய்ப்பிற்கு செல்லும் மாணவ, மாணவிகளுக்கு துறைசார்ந்த வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கும் அதற்கு தேவையான வழிமுறைகளையும் விளக்கி பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் மத்திய மாநில அரசுத் துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் தேர்வு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். பின்பு மாணாக்கர்களின் வினாக்களுக்கு விடையளித்தார். இறுதியாக உதவிப்பேராசிரியை இராஜராஜேஸ்வாரி நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் கல்லூரியின் துணை முதல்வர்கள், கல்வி முதன்மையர்கள், இருபால் ரோசிரியர்கள் அனைத்து துறைசார்ந்த இறுதியாண்டு பயிலும் மாணவ, மாணவிகள் 350 பேர் கலந்து கொண்டனர். இதற்கான எற்பாட்டினை கல்லூரியின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# தென்காசி மாவட்டத்தில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது, விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, ஜூலை.18-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நல்லாட்சியில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்றுதொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது, விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசு கட்டுப்பாடு வழிகாட்டுதல்களின்படி (www.tnpcb.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது) மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, பொது மக்களுக்கு கீழ்கண்டவாறு வேண்டுகோள் விடப்படுகிறது.

களிமண்ணால் செய்யப்பட்டதும் மற்றும் பிளாஸ்டர் ஆஃப்பாரிஸ், பிள ாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் (பாலிஸ்டிரின்) கலவையற்றதுமான, சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படுகிறது.

சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப் பதற்கு உலர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம். ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாக்கோல் பொருட்களை பயன்படுத்த கண்டிப்பாக அனுமதிக்கப்படாது. நீர் நிலைகள் மாசு படுவதை தடுக்கும் பொருட்டு, வைக்கோல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மட்டுமே சிலைகள் தயாரிக்க அல்லது சிலைகள்/பந்தல்கள்களை அலங்கரிக்க பயன்படுத்த வேண்டும். சிலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத இரசாயன சாயம்/ எண்ணெய் வண்ணப்பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல் மற்றும் செயற்கை சாயத்தை அடிப்படையாக கொண்ட வண்ணப்பூச்சுகளை பயன்படுத்தக்கூடாது, மாற்றாக சுற்றுச்சூழலுகுகந்த நீர் சார்ந்த / மக்கக் கூடிய / நச்சு கலப்பற்ற இயற்கை சாயங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். சிலைகளை அழகுபடுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு இரசாயனங்கள் கொண்ட பொருட் களுக்கு பதிலாக, இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின்படி கரைக்க அனுமதிக்கப்படும்.

விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு செய்ய வேண்டியவை, சுற்றுச்சூ ழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளைப் பயன்படுத்துங்கள் .சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளைப் பயன்படுத்துங்கள். சிலைகளுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் சார்ந்த, இயற்கையாக மக்கக்கூடிய மற்றும் நச்சுத்தன்மையற்ற இயற்கை சாயங்களைப் பயன்படுத்துங்கள். சுற்றுச்சூழலிற்கு உகந்த பூக்கள், இலைகள் மற்றும் துணிகளை பூஜை பொருட்களாக பயன்படுத்தவும். அகற்றி துவைத்து மீண்டும் உபயோகிக்கக் கூடிய அலங்கார துணிகளையே அலங்காரத்திற்கு பயன்படுத்தவும். பிரசாத விநியோகத்திற்கு மக்கும் / மீண்டும் பயன்படுத்தக்கூடிய தட்டுகள் மற்றும் கண்ணாடி கோப்பைகளை பயன்படுத்தவும். பொறுப்புடன் குப்பைகளை பிரித்து அப்புறப்படுத்துங்கள் .அறிவிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே சிலைகளை கரைக்க வேண்டும்.எல்.இ.டி பல்புகள் போன்ற சுற்றுச்சூழலிற்கு உகந்த விளக்குகளை பயன்படுத்தவும்.அலங்கார பொருட் களை எதிர்கால பண்டிகைகளுக்கு சேமித்து பயன்படுத்தவும்

விநாயகர் சதுர் த்தி விழாவிற்கு செய்யக்கூடாதவை பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் சிலைக ளைப் பயன்படுத்த வேண்டாம். சிலைகளை அலங்கரிப் பதற்கு, சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும், ஒருமுறை உபயோகித்து தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக், தெர்மாகோல் மற்றும் இரசாயணப் பொரு ட்கள் அல்லது சாயங்களை பயன் படுத்த வேண்டாம்.சிலைகளின் மேல்பூச்சிற்கும் அலங்காரத்திற்கும் நச்சுத்தன்மை யுள்ள மற்றும் மக்கும் தன்மையற்ற இரசாயன சாயங்கள்/ எண்ணெய் வண்ணப்பூச்சுகளை பயன்படுத்த வேண்டாம்.சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும், ஒருமுறை உபயோகித்து தூக்கி யெறிய ப்படும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோலாலான பொருட்களை பூஜை பொருட்களாக பயன்படுத்த வேண்டும் .வண்ணப்பூச்சுக்கள் மற்றும் பிற நச்சு இரசாய னங்கள் கொண்ட ஒருமுறையே உபயோகித்து தூக்கியெறியக்கூடிய அலங்கார பொருட்களை பயன்படுத்த வேண்டாம்.பண்டிகையின் போது ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியக் கூடிய பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் மற்றும் உறிஞ்சு குழாய்களை பயன்படுத்துவதை தவிர்க்கவும்.குப்பை மற்றும் கழிவுகளை பொறுப்பற்று கொட்ட வேண்டாம்.அனுமதி இல்லாத நீர் நிலைகளில் சிலைகளை கரைக்க வேண்டாம்.ஃ பிலமென்ட் பல்புகளை விளக்குகளாக பயன்படுத்த வேண்டாம். ஒற்றை உபயோக அலங்கார பொருட்களை பயன்படுத்த வேண்டாம்.

விநாயக சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு கொண்டாடும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.



■ தென்காசி மாவட்டம் மாவட்ட வர்த்தக அணி தலைவரும் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மாநாடு முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் திமுக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை பிறந்த நாளையொட்டி நேரில் சந்தித்து கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார் உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணிஸ்ரீ குமார் மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் திமுக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.







■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் நாகமுகுந்தன்குடி ஊராட்சி புதுக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலை ஒரு மாதத்தில் பெயர்ந்துள்ளது என்று கடந்த 25ஆம் தேதி மாலை தந்தி செய்தியில் வெளியானது. மாலை தந்தி செய்தி எதிரொலியாக இதுகுறித்து ஆய்வு செய்த ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சேதமடைந்த பேவர் பிளாக் சாலையை நேற்று முன்தினம் சரி செய்தனர். செய்தியை வெளியிட்ட மாலை தந்தி நாளிதழிழுக்கும் துரித நடவடிக்கை எடுத்த ஊராட்சி நிர்வாகத்திற்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்

## தமிழ்நாடு முதலமைச்சர் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம்

# வருகின்ற ஜூலை 18 அன்று காரைக்குடி மாநகராட்சி மற்றும் மானாமதுரை, சிவகங்கை, தேவகோட்டை, எஸ்.புதூர், கல்லல் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.18-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஜூலை 18 ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சி க்குட்பட்ட வார்டு எண்: 1,2,3 ஆகிய பகுதிகளு க்கென கழனிவ ாசல் முத்துகி ருஷ்ணா மஹாலிலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென இடைக் காட்டூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென சோழபுரம் ஊராட்சியிலுள்ள மீனா திருமண மண்டபத்திலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென சிறுமருதூர் ஊராட்சி யிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென எஸ்.புதூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக் கூடத்திலும்,

கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென குன்றக்குடி ஊராட்சி யிலுள்ள வெள்ளாளர் சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்பு றங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரி வித்துள்ளார்.

## திருப்பூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்

# 18.07.2025 அன்று திருப்பூர் மாநகராட்சி, காங்கேயம் அவிநாசி, நகராட்சி, கொமரலிங்கம் பேரூராட்சி, தாராபுரம் மற்றும் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெற உள்ளது

திருப்பூர், ஜூலை.18-

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை 15.07.2025 கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 325 முகாம்கள் நடைபெற உள்ளது. குறிப்பாக, முதல் கட்டமாக 120 முகாம்கள் இன்று முதல் 14.08.2025 வரையிலும், இரண்டாம் கட்டமாக 96 முகாம்கள் 15.08.2025 முதல் 14.09.2025 வரையிலும், மூன்றாம் கட்டமாக 96 முகாம்கள் 15.09.2025 முதல் 14.10.2025 வரையிலும் மற்றும் நான்காம் கட்டமாக 13 முகாம்கள் 15.10.2025 முதல் 14.11.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும் அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறையின் சேவைகள், திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப் படும். இம்முகாம் களில் பெறப்படும் விண்ணப் பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக இன்று முதல் 14.08.2025 வரை நடைபெறவுள்ள முகாம்களில் மாநகரா ட்சியில் 7 முகாம்களும், நகராட்சியில் 20 முகாம் களும், பேரூராட்சிகளில் 7 முகாம்களும், ஊரக பகுதிகளில் 66 கிராம பஞ்சாயத்து மற்றும் 20 பெரி அர்பன் பகுதி என மொத்தம் 120 முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாம்களானது காலை 9.00 மணிக்கு தொடங்கி மாலை 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

அந்த வகையில் 18.07.2025 அன்று திருப்பூர் மாநகராட்சி, 2மண்டலத் திற்குட்பட்ட வார்டு எண் 6,18,32 ஆகிய பகுதிகளுக்கு திருப்பூர், தியாகி குமரன் காலனி, குமரன் கூட்டுறவு வங்கி வளாகத்திலும், காங்கேயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3,4,9 ஆகிய பகுதிகளுக்கு கேவிஏ மஹாலிலும், அவிநாசி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13,14,15 ஆகிய பகுதிகளுக்கு தேவந்திர குல வேளாளர் திருமண மண்டபத்திலும், கொமரலிங்கம் பேரூராட்சி க்குட்பட்ட வார்டு எண் 1,2,3,4, 5,6,7,8 ஆகிய பகுதிகளுக்கு உடுமலை ப்பேட்டை பழனி சாலை வாசவி கன்னிகா பரமேஸ்வரி மண்ட பத்திலும், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தி ற்குட்பட்ட பொன்னாபுரம், பொட்டிகம்பாளையம் ஊராட்சிகளுக்கு கோவிந்தாபுரம் குமரப்ப வேளாளர் மண்டபத்திலும், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அணிக்கடவு ஊராட்சிக்கு அணிக்கடவு எஸ்.ஹச்.ஜி கட்டடத்திலும் நடைபெறவுள்ளது. மேலும், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மகளிர் உரிமைத் தொகைக்கு பொதுமக்கள் நேரடியாக முகாம்களுக்கு சென்று விண்ணப்பங்களை பெற்று, அதே முகாம்களில் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் உள்ளிட்ட ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்பெறலாம். கலை ஞர் மகளிர் உரிமைத் திட்டத் திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

எனவே, திருப்பூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைபெறவுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் உங்கள் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நாட்களில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொ ண்டு தங்கள் மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, தெரி வித்தார்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

கன்னியாகுமரி, ஜூலை.18-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜூலை 2025 மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 25.07.2025 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக நாஞ் சில் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து ஜூன் 2025 மாத விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்பட்ட விவசாயம் தொடர்பான மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும் விவசாயிகளின் விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நேரில் பெறப்படும்.

கோரிக்கை மனுக்கள் பதிவு செய்யும் வசதி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) அலுவலகத்தில் செய்யப்பட்டிருக்கும். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரடியாக தங்கள் கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

# பெருங்களத்தூர் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் கலைஞரின் 102வது பிறந்தநாள் விழா தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி

பெருங்களத்தூர், ஜூலை.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் ஓர்ணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை விளக்க தெருமுனை கூட்டம் இளைஞர் அணி அமைப்பாளர் கா.மு.சூர்யா தலைமை யிலும் ஜி.ஸ்ரீதர்குமார், ஏபாபு வரவேற்பிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தலைமை கழக பேச்சாளர் செங்கை தாமஸ், இளம் பேச்சாளர் இரா. ரிஷி சந்தோஷ், கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் பகுதி கழக செயலாளர்கள்



டி.காமராஜ், எஸ்.இந்திரன், தாம்பரம் தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், டி.ஆர்.கோபி, ரமணி ஆதிமூலம், கீ.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், பி.ஜோதிகுமார், லிங்கேஸ்வரி பாபு, செ.சுரேஷ், எல்.பெரியநாயகம் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப் பாளர்கள், இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சின்னமனூர், போடிநாயக்கனூர் நகராட்சி மற்றும் குச்சனூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற முகாம்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் கலந்து கொண்டு பார்வையிட்டார்

தேனி, ஜூலை.18-

தேனி மாவட்டம், சின்னமனூர், போடிநாயக்கனூர் நகராட்சி மற்றும் குச்சனூர் பேரூராட்சி ஆகிய பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், அன்று (16.07.2025) கலந்து கொண்டு பார்வையிட்டார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களை, சென்று சேரும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத் தினை நேற்றை தினம் தொடங்கி வைத்தார்கள். இம்முகாம்கள் மூலம் நகர்பகுதிகளுக்கு 13 துறைகளில் 43 சேவை களும், கிராமப்ப குதிகளுக்கு 15 துறைகளில் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகைப் பெற தகுதியுள்ள பெண்களும் இம்முகாம்களில் விண்ணப்பித்து பயன்பெறலாம்.




இரண்டாம் நாளாக இன்றைய தினம் சின்னமனூர் நகராட்சி குட்பட்ட 21,22 ஆகிய வார்டு பகுதிகளுக்கு மறவர் மக்கள் மன்றத் திலும், குச்சனூர் பேரூராட்சி குட்பட்ட வார்டு 1,2,3,4,5,6 ஆகிய பகுதிகளுக்கு மாமன்னர் திருமலை நாயக்கர் மண்டபத்திலும், போடிநாயக்கனூர் நகராட்சி குட்பட்ட வார்டு 1, 2 ஆகிய பகுதிகளுக்கு வர்த்தக சங்கம் மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வை யிட்டார்கள்.

இம்முகாம்களில் மனு அளித்தவர்களுக்கு உடனடி தீர்வாக குடும்ப அட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மின் இணைப்பு பெயர் மாற்ற ஆணை உள்ளிட்ட அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பயனாளிகளுக்கு வழங்கினார்.

மேலும், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தி ற்குட்பட்ட கோத்தலூத்து, பிச்சம்பட்டி ஆகிய பகுதி களுக்கு முல்லை யம்பட்டி சமுதாயக்கூடத்திலும், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேகமலை, குமணன்தொழு ஆகிய பகுதிகளுக்கு குமணன்தொழு வெற்றி மஹாலிலும் முகாம் நடைபெற்றது.

இம்முகாம்களில் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சாந்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்.சிவபாலன், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திரு.செய்யது முகமது, உதவி இயக்குநர் (நில அளவை) அப்பாஸ், நகர்மன்றத் தலைவர்கள் அய்யம்மாள் ராமு (சின்னமனூர்), திருமதி ராஜராஜேஸ்வரி சங்கர் (போடிநாயக்கனூர்), நகராட்சி ஆணையாளர்கள் .கோபிநாத் (சின்னமனூர்), செல்வி பார்கவி (போடிநாயக்கனூர்) வட்டாட்சியர்கள் .கண்ணன் (உத்தம பாளையம்), .சந்திர சேகரன் (போடிநாயக்கனூர்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக Assistant Tractor Operator பயிற்சி அளிக்கப்படுகிறது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தகவல்

மதுரை, ஜூலை.18-

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக Assistant Tractor Operator பயிற்சி மதுரை மாவட்டம், நெல்லியேந்தல்பட்டி (விவசாய கல்லூரிக்கு) அருகில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), அரசு இயந்திர கலப்பை பணிமனையில் நடத்திட சென்னை, தலைமைப்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் Assistant Tractor Operator பயிற்சி வகுப்பு 15 முதல் 30 நபர்களுக்கு 27 நாட்கள் நடத்தப்படும். 2025-2026ஆம் ஆண்டில் 2 பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு அறிவுரை பெறப்பட்டுள்ளது. Assistant Tractor Operator பயிற்சி ஜூலை 2025 ஆம் மாதத்தின் மூன்றாம் வாரத்தில் துவங்கப்பட உள்ளதால் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி இல்லை மற்றும் வயதுவரம்பு 18 முதல் 35 வயது வரை உள்ள மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டும், ஆதார் அட்டை மற்றும் புகைப்படம் ஆகியவற்றை மதுரை மாவட்டம், நெல்லியேந்தல்பட்டி (விவசாய கல்லூரிக்கு) அருகில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை), அரசு இயந்திர கலப்பை பணிமனைக்கு நேரில் சென்று தங்கள் பெயரினை பயிற்சிக்கு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், கூடுதல் விபரங்களுக்கு 7904859997, 9865967063 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பயிற்சி முடித்தபின் ஓட்டுநர் உரிமம் பெற ஆவணம் செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரி வித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161